**தலைப்பு 306 – புகையிரதத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் 3.1.2 அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட வருமானக் கணக்கு மற்றும் களஞ்சிய முற்பணக் கணக்கு புகையிரதத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 306 – புகையிரதத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதி திணைக்களத்தின் பொது முகாமையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர்,

ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக புகையிரதத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.18 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128 கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2.1.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.3.1 |
| | | 3. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை | 2.2.1 |
| | | 4. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.2.1 |
| | | 5. பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயன் முன்னேற்றம் அடையாத செயற்திட்டங்கள் | 2.2.2 |
| | | 6. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.3.2 |
| | | 7. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.8 |
| | | 8. பணப் பெறுமதிக் கணக்காய்வின் போது கண்டறிப்பட்ட குறைபாடுகள் | 2.1 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்காக அமைப்பு வெற்றிகரமானது எனவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை பிழையின்றியும் தீர்மானிப்பதற்கு அவற்றை முறைப் பிரகாரகும் முற்றாகவும் தாமதமின்றியும் சேகரிப்பதற்கு மற்றும் கிடைக்கும் பணத்தை கணக்கீடு செய்வதற்கும், அரசின் சார்பாக பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதின் மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கு மற்றும் அந்த அரச நிதியத்தில் இருந்து தாமதமின்றியும் பிழையின்றியும் கொடுப்பனவு செய்வதற்கு அவற்றில் போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்வது எனவும், | 1. வெளிநாட்டுதவி செயற் திட்டங்களில் செயலாற்றல் நிறைவேற்றப்படாமை<br>2. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை<br>3. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.2.1(iii)<br>2.1.2<br>2.3.2 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப் படாமை.<br>2. இணக்கமின்மைகள் | 2.16<br>2.17 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவு மற்றும் வினியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளகச் சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம் முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப் படுகின்றதெனவும் | 1. வருமானக் கணக்கு களில் குறைபாடுகள் | 2.12 |
| | | 2. அரசாங்க உத்தியோக த்தர்களுக்கான முற் பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.13 |
| | | 3. களஞ்சிய முற்பணக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.14 |
| | | 4. கொடுக்கல் வாங்கல் களை தீர்த்து ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான முற்பணக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.15 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | 1. வருடாந்த பொருள் மெய் மையாய்வில் குறைபாடு கள் | 2.4(ஈ) |
| | | 2. முகாமைத்துவப் பலவீன ங்கள் | 2.9 |
| | | 3. சொத்துக்கள் முகாமைத் துவத்தின் குறைபாடுகள் | 2.4 (அ),(ஆ),(இ) |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறை சேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படு வதாகவும் | 1. பாதீட்டு மதிப்பீடு நடை முறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிருக்காமை | 2.11 |
| | | 2. வருடாந்த செயலாற்றல் அறிக்கை தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது | 2.1.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல் கள் மேற்கொள்வதெனவும் | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.6 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர் பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர் கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | நட்டங்களும் சேதங்களும் | 2.7 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 14 பிரதான செய்பணிகள் காணப்பட்டதுடன், திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள 10 உப திணைக்களங்கள் மற்றும் 09 வெளிநாட்டு செயற்திட்டங்களினால் எதிர்பார்க்கும் விளைவுகளை பெற்றுக் கொள்வதற்காக 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் திணைக்களத்தின் வருமான குறியீட்டுடன் வருமானம் சேகரித்தல் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

#### 2.1.2 செய்பணிகளை நிறைவேற்றாமை

**செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செய்பணிகளை நிறைவேற்றாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2 உப திணைக்களங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,060 மில்லியன் ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ரூபா 2,509 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கியிருந்த 07 செயற்திட்டங்களிற்கான நிதி செயலாற்றுகை 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**2.1.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களில் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ் அறிக்கை 2018 ஆகஸ்ட் 01 திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.1.4 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்**

திணைக்களத்தின் கருமங்களுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் இலக்குகள், அந்த இலக்குகளின் நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகள் மற்றும் இலக்குகளை நோக்கி நெருங்குவதை அளவீடு செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காணப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2 செயற்படுத்தியிருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் உள்நாட்டு நிதியத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் 34 செயற்திட்டங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 9,023 மில்லியன் ஏற்பாடு ஒன்று, புகையிரதப் பாதை மீளமைக்கும் 05 செயற்திட்டங்கள் மற்றும் புகையிரதத் தொகுதியை அபிவிருத்தி செய்யும் 04 செயற்திட்டங்களுக்கு 09 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள் ஆக மொத்தம் ரூபா 9,411 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் முறையே ரூபா 7,377 மில்லியன் மற்றும் ரூபா 5,463 மில்லியன் தொகை ஆக மொத்தம் 12,840 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 5,594 மில்லியன் தொகை அதாவது ஒதுக்கியிருந்த ஏற்பாடுகிளல் 30 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.2.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்**

புகையிரதப் பாதைகள் அபிவிருத்தி செய்வதற்காக செயற்படுத்தப்பட்ட 05 வெளிநாட்டு செயற்திட்டங்களின் கருமங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வடக்கு புகையிரத பாதைக்காக சமிக்ஞை மற்றும் தொலை தொடர்பு முறையை பொருத்துவதற்கு முன்னர் புகையிரத நிலையங்களை சிறியவை மற்றும் பெரியவை என இனங்காணாமல் சமிக்ஞை முறையை நிறுவுவதற்காக புகையிரத நிலையங்களில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த காரணத்தினால் ஒப்பந்தக்காரருக்கு 1,020,127 தொகை ஐ.அமெரிக்க டொலர்கள் மிகையாக செலுத்தி இருந்தது. மிகையாக செலுத்தியிருந்த பணத்தில் 339,927 ஐ.அமெரிக்க டொலர்கள் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் 2018 ஜூலை இறுதி அளவிலும் மீதித் தொகையாக 680,200 ஐக்கிய அமெரிக்க டொலர்களை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மடுவில் இருந்து தலை மன்னார் வரையான புகையிரதப் பாதையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 பாலங்களை குறையுடைய நிலைமையில் காணப்பட்டமையால் அப் பாகங்களை அகற்றி புதிய பாகங்களை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக் கம்பனி இணங்கியிருந்தது. செயற்திட்டத்தின் உடன்பட்ட காலம் மற்றும் வழுக்களை சரிசெய்யும் காலம் 2016 திசெம்பர் 13 திகதி முடிவடைந்திருந்த போதிலும் குறைபாடுகளை சரிசெய்வதற்கு மற்றும் பாலங்களை நிர்மாணிப்பதற்கு இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 உள்நாட்டு நிதியங்கள் பயன்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்தொகை ரூபா 874 மில்லியன் (US $ 6,478) புகையிரதக் குறுக்கு பாதை 200 படலைகள் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த வேலை 2016 அக்தோபர் 26 திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஜனவரி 26 ஆம் திகதி பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டியிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 31 திகதி வரை 84 புகையிரத குறுக்குப்பாதை படலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2017 ஆண்டின் போது மாத்திரம் புகையிரத குறுக்கு பாதைகளில் 651 விபத்துக்கள் நடைபெற்றிருந்ததுடன் அதற்காக இந்த செயற்திட்டத்தின் தாமதமும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கவில்லை என்பதை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதுள்ளது.

(ஆ) புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளில் இருந்து 2,000 ஏக்கர் வெளித் தரப்பினருக்கு வாடகைக்கொடுத்திருத்தல் தொடர்பாக சுமார் 7,245 கோவைகள் பேணப்படுவதுடன் அவற்றில் சுமார் 5,280 தொகை கோவைகள் செயற்படு நிலையில் காணப்படுவதுடன் 1,965 கோவைகள் செயலிழந்திருந்தவையாக உள்ளன என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேற்கூறிய வாடகை கோவைகளை கணினி மயப்படுத்தி நாளது வரை ஆக்கப்படல் மற்றும் வாடகை வருமானத்தை சேகரிப்பதற்காக வினைத்திறனுடன் மென்பொருள் தயாரிப்பதற்காக 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையே ரூபா 1,399,015 தொகை மற்றும் ரூபா 1,948,929 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இது வரையும் மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதுள்ளது.

## 2.3 பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கல்கள் மற்றும் கோவைகள் பெற்றுக்கொள்ளல்

### 2.3.1 பெறுகைகளை திட்டமிடல்

திணைக்களத்தினால் அரச பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 12,069 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 10,993 மில்லியனிற்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டியிருந்த பெறுகை திட்டம் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) பெறுகை திட்டமிடலும் மற்றும் ஆரம்ப கட்டமும்**

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.1(இ) இன் பிரகாரம் விரிவான பெறுகை திட்டமொன்று மற்றும் வழிகாட்டல் 4.2.2 இன் பிரகாரம் பெறுகை செயன்முறைக்காக நேரசூசி தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) திட்டங்களை செயற்படுத்துதல் மேற்பார்வை செய்தல் மற்றும் நாளது வரை ஆக்கல்**

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.1 மற்றும் 4.4 மற்றும் 2017 ஜனவரி 16 திகதிய 8/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் பெறுகை நேரசூசி காலாண்டு அடிப்படையில் தயாரித்திருந்த போதிலும், மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.2 பெறுகை செயன்முறையை செயற்படுத்துதல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.3.11 இன் படி பெறுகைக்கு உரிய அனைத்து ஆவணங்களும் தயாரிக்கப்பட்டு விலைமனு அழைக்கப்பட வேண்டுமெனினும் 2013 ஆண்டின் போது ரூபா 39.63 மில்லியன் தொகைக்கு S-5 வகையைச் சேர்ந்த என்ஜின் ஒன்றிற்காக மின்பிறப்பாக்கி ஒன்று மற்றும் டீசல் என்ஜின் ஒன்று கொள்வனவு செய்யும் பெறுகையின் விலைமனு அழைப்பு, ஆவணங்களின் விலைமனு பாதுகாப்பு பிணை முறிக்கு தேவையான ஆவணங்கள் அடங்கியிருக்காததுடன் ஒப்பந்த பெறுமதிக்காக விலைமனு பாதுகாப்பு பிணைமுறி பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) அஹுன்கல்ல புகையிரத நிலையத்தில் சமிக்ஞை முறையை நிர்மாணித்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.5 இன் பிரகாரம் கூறுவிலை அழைப்பதற்கு முன்னர் பொறியியல் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 890,350 ஐ.அமெரிக்க குடியரசின் டொலர்களுக்கு கொள்வனவு செய்திருந்த உபகரணங்களில் விலையின் நியாயகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்ட அலகினால் பொறியியல் மதிப்பீடு ஒன்று தயாரித்திருக்கவில்லை.

(ii) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.2 இன் பிரகாரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நேரசூசியின் பிரகாரம் பெறுகை செயற்படுத்தப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செயற்படாமையால் பண்டங்கள் கிடைக்கப்பட வேண்டிய காலத்தை விட 03 வருடங்கள் கடந்திருந்தது. அதன் பிரகாரம், வங்கி வட்டியாக ரூபா 4,121,840 இற்கான மேலதிக தொகையொன்று செலுத்த நேரிட்டிருந்தது.

(இ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.4.10(இ) இன் பிரகாரம் பண்டங்கள் கொள்வனவு செய்யும் போது பெறுகை நிறுவனத்தை பாதுகாப்பதற்காக ஒப்பந்த தொகையில் 10 சதவீத்தை விட குறையாத பொருத்தமான பண பாதுகாப்பு பிணை முறிஒன்றின் மூலம் பொறுப்பினை மேவகை செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் S-5 வகுப்பை சேர்ந்த டீசல் என்ஜின் ஒன்றிற்காக மின்பிறப்பாக்கி ஒன்று, டீசல் என்ஜின் ஒன்று, Lorry mounted Crane மற்றும் கற்களை துளைக்கும் இயந்திரம் ஒன்று என்பனவற்றின் கொள்வனவு செய்யும் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

**(அ) சொத்துக்களை ஆவணப்படுத்துதல்**

நிலையான சொத்துக்கள் தொடர்பாக 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் நிதிப்பிரமாணம் 1647 இன் பிரகாரம் வாகனப் பட்டோலை தயாரித்திருக்காததுடன், 2017 ஜூன் 28 திகதிய 01/2017 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் காணப்படும் கொம்டிலோர் ஜனரல் அலுவலகத்திற்கு சொத்துக்கள் தொடர்பாக தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை.

**(ஆ) அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்துக்களை உச்ச மட்ட வினைத்திறனுடன் பயன்படுத்தாமை**

திணைக்களத்திற்கு சொந்தமான 14,129 ஏக்கர் காணியில் புகையிரதப் பாதைகள், அலுவலக கட்டிடங்கள் மற்றும் களஞ்சியங்களுக்கு 2,000 ஏக்கர், வாடகை அடிப்படையில் வெளித் தரப்பினரும் வாடகைக்கு கொடுத்துள்ள 2,000 ஏக்கர்கள், வாடகை அடிப்படை இன்றி ஏனைய அரச நிறுவனங்களுக்கு 34 ஏக்கர்கள் ஆக மொத்தம் 4,034 ஏக்கர் பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதியான புகையிரத காப்பு பிரதேசத்தைச் சேர்ந்த பாரிய அளவான காணி அங்கீகாரம் இன்றி கையாளப்பட்டுள்ள காரணத்தினால் திணைக்களத்திற்கு சொந்தமான காணிகள் உச்சமட்ட வினைத்திறனுடன் பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**(இ) விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 5,086,986 தொகை பெறுமதியான 1,000 இலத்திரனியல் கட்டுப்பாட்டு அலகுகள், 2011 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தி செயற்படாமல் காணப்பட்டது.

(ii) 30 புகையிரதப் பெட்டிகள், 18 என்ஜின், 18 புகையிரதப் பெட்டிகள், 22 இயந்திர அலகுகள் மற்றும் மோட்டார் வாகனம் ஒன்று செயற்படாமல் காணப்பட்டது.

(iii) 1994 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 33 மில்லியன் கிரயத்தையுடைய கன்டெய்னர் போர்க் லிப்ட் இயந்திரம் 2011 ஆண்டு முதல் செயற்படாமல் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(iv) இரத்மலான உப திணைக்கள தொகுதியில் 01 புகையிரத வெகன் வண்டி 2002 ஆண்டு முதலும், BMT 5374, BMT 5370 மற்றும் BMT 5381 ஆகிய வெகன் வண்டிகளும் நீண்டகாலம் முதலும் புனர்நிர்மாணப் பணிகள் செய்யப்படாமல் செயற்தளத்தில் உக்கக் கூடிய நிலையில் செயற்படாமல் காணப்பட்டது.

**(ஈ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 திகதிய 05/2016 இலக்கங் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கைகள் சுற்றறிக்கையின் 3.2.6 பந்தியின் பிரகாரம் 2018 ஜூன் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் 2018 ஆகஸ்ட 31 திகதி வரையும், 02 கிளை அலுவலகங்களின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கைகள், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) 2015, 2016 ஆண்டுகளின் கணிப்பீட்டு சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டியிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 757(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.5 ஈடுபாட்டு பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள்**

**வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து ஈடுபாட்டு பொறுப்புக்களை அணுகுதல்**

2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பந்தி 02(அ) இற்கு இணங்காமல் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 121 மில்லியன் இற்கான ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 4.9 மில்லியன் ஈடுபாட்டு பெறுமதியினை ஏற்படுத்தியிருந்தது.

**2.6 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் 2016 அக்தோபர் மாதத்தில் ரூபா 107.49 மில்லியனிற்கு (FOB விலை) கொள்வனவு செய்திருந்த 03 மோட்டார் ட்ரொலிகளின், ஒரு ட்ரொலி 2018 ஜுலை 31 திகதி அளவில் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்த கொடுக்கல் வாங்கல் முறைசார் தன்மையற்றுக் காணப்பட்டது.

**2.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) களஞ்சிய முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவழிக்கப்படாத நட்டங்களின் மீதி ரூபா 69.15 மில்லியனாக காணப்பட்டது. இந்த நட்டங்கள் ரூபா 13.83 மில்லியினை மாத்திரம் பதிவழிப்பதற்கு விண்ணப்பித்திருந்ததுடன், அதன் தற்போதைய நிலைமை தொடர்பாக கணக்காய்விற்கு அறிவிக்கப்படவில்லை.

(ii) திறைசேரிக்கு செலுத்த வேண்டிய மீதியொன்றென ரூபா 6,357.6 மில்லியன் தொகை காட்டப்பட்டிருந்தது. இந்த மீதியில் சராசரி இருப்பு ரூபா 5,312 தொகை, வழியில் இருப்பு ரூபா 747.9 தொகை மற்றும் பதிவழிப்பதற்கு உத்தேசித்துள்ள நட்டம் ரூபா 13.8 தொகை அடங்கியிருந்தது. மேலும் இந்த செலுத்த வேண்டிய மீதியில் பௌதீக வாழ்வு ஒன்று இன்றிய ரூபா 61.8 பெறுமதியான டீசல் இருப்பு ஒன்றினால் மற்றும் துறைமுகத்தில் தீ பற்றியதனால் ஏற்பட்டிருந்த ரூபா 55.2 மில்லியன் நட்டமொன்றினையும் கொண்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறிவிக்கப்பட்டிருந்த 626 விடயங்களின் நட்டங்கள் சேதங்களின் பெறுமதி ரூபா 311 மில்லியனாகும். அவற்றில் 10 வருடங்களை மிகைத்திருந்த மீதி ரூபா 259.82 மில்லியனும் 05 வருடங்கள் மற்றும் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 24.22 மில்லியன் தொகை மற்றும் 5 வருடங்கள் விட குறைந்த மீதி ரூபா 27.03 மில்லியனையும் கொண்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நாரஹேன்பிட புகையிரத நிலையத்திற்கு அண்மையில் சமிக்ஞை செயலிழந்து இருக்கும் போது புகையிரதம் ஓடியதினால் சமிக்ஞை உபகரணத்திற்கு (பயின்டுக்கு) ஏற்பட்டிருந்த சேதத்தை உரிய நிலைக்கு ஆக்குவதற்காக ரூபா 791.962 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**2.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 39.19 மில்லியன் பெறுமதியான S-5 புகையிரதத்திற்கு என்ஜின் பொருத்துதல் 02 மாதங்களில் பூர்த்தி செய்திருந்த போதிலும் புகையிரதப் பெட்டிகள் பொருத்துவதற்காக முறையான திட்டமொன்று

காணப்படாமையால் 2017 திசெம்பர் 31 திகதி வரை ஓட்டத்தை ஏற்ற நிலைமைக்கு ஆக்குவதற்கு முடியாதிருந்தது. இந்த புகையிரத என்ஜின் இற்கான உத்தரவாத காலம் ஆகிய 02 வருடங்கள் 2016 பெப்ரவரியில் முடிவடைந்திருந்தமையால் என்ஜினின் குறைபாடுகள் தொடர்பாக வழங்குனர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தார் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 அக்தோபர் மாதத்தின் போது கொள்வனவு செய்திருந்த 03 மோடர் ட்ரொலி ஓட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் 03 மாதங்களுக்குள் திருத்த வேலைக்காக புகையிரத திணைக்களத்தின் ஊழியர்களுக்கு மேலதிக நேரம் சம்பளமாக ரூபா 2.94 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த செலவினை வழங்குனரிடம் அறவிடப்பட வேண்டும் என பிரதான இயந்திர பொறியியலாளரினால் களஞ்சிய அத்தியட்சகருக்கு அறிவித்திருந்த போதிலும் அப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மோடர் ட்ரெலி கொள்வனவு செய்த போது வழங்குனர் பண்டங்களை கப்பலில் ஏற்றுதல் 2014 அக்தோபர் 29 திகதி மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2106 அக்தோபர் 04 திகதியே கப்பலில் ஏற்றியிருந்தனர். அதன் காரணமாக 230 நாட்கள் தாமதமாகி கப்பலில் ஏற்றியிருந்ததால் செலாவணி விகிதாசாரத்தில் ஏற்பட்டிருந்த அதிகரிப்பின் காரணமாக வழங்குனருக்கு ரூபா 2,261,085 தொகை மிகையாகச் செலுத்த வேண்டியிருந்தது.

(ஈ) இரத்மலான உப திணைக்களத்தில் அமைந்துள்ள 688 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் 126 இற்கு மாத்திரம் நீர் மனுக்கள் பொறுத்தப்பட்டிருந்த போதிலும், 562 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கு இதுவரை நீர்மனு பொருத்தியிருக்கவில்லை.அதன் காணரமாக உப திணைக்களத்தின் பிரதான நீர் வழங்குதலில் இருந்து வதிப்போர்கள் மற்றும் அங்கீகாரமற்ற வதிபவர்களும் நீர் பெற்றுக்கொள்வதினால் மீளாய்வாண்டின் போது ரூபா 43.68 மில்லியன் தொகை கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

**2.9 முகாமைத்துவ பலவீனங்கள்**

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வண்டிகள் மற்றும் கொள்கலன்கள் புனர்நிர்மாணச் செயற்திட்டம் தொடர்பான பரிசோதனையின் போது BMT 10601 ஆகிய ஒரே இலக்கத்தை கொண்ட 02 வெகன்கள் பெயரிடப்பட்டிருந்ததுடன், புனர்நிர்மாண வேலைகளுக்கு பயன்படுத்தியிருந்த வெகன் ஐ நிலையான சொத்துப்பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) இடப் பரிசோதனையின் போது பாதை பரிசோதகர் அலவலகத்தின் வரைபடத்தின் பிரகாரம் பேராதனை கண்டி புகையிரத பாதையில் முல்கம்பல படலையின் அண்மையில் 2 மைல் 48 சங்கிலி கொண்ட புகையிரத ஒதுக்கலில் அங்கீகாரம் இன்றி நான்கு மாடி கட்டிம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு காணப்பட்டதுடன் அதில் 03 மாடிகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த அங்கீகாரம் இன்றிய நிர்மாண வேலையினை தடைசெய்வதற்காக திணைக்களத்தின் பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.10 பணப் பெறுமதி கணக்காய்வு**

--------------------------------

திணைக்களம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த பணப் பெறுமதி கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

**(அ) கன்டேனர் போக்குவரத்து**

-------------------------------

(i) புகையிரத என்ஜின் ஒன்றின் மூலம் 20 அடி நீளமான 18 கன்டெயினர்கள் எடுத்து செல்ல முடியும் அத்துடன் 40 அடி நீளமான 09 கன்டெய்னர்கள் எடுத்து செல்ல முடியும். இதற்காக புகையிரத என்ஜின் 01 கிலோமீற்றர் தூரம் ஓடுவதற்கு எரிபொருள் லீட்டர் ஒன்று எரிகின்றது. 20 அடி நீளமான 18 கன்டெய்னர்கள் எடுத்துச் செல்வதற்காக பிரெய்மூவர் (கொள்கலனை எடுத்துச் செல்லும் பெட்டி) 18 பயன்படுத்தும் போது அதற்காக கிலோமீற்றர் ஒன்றிற்கு ஒன்றிற்காக செலவிடப்படும் எரிபொருள் (0.26x18) 4.68 லீற்றர்களாகும். 40 அடி நீளமான கன்டேனர் 09 எடுத்துச் செல்வதற்காக பிரய்ம்மூவர் (கொள்கலன் எடுத்துச் செல்லும் பெட்டி) 09 பயன்படுத் வேண்டியிருப்பதுடன் அதற்காக கிலோமீற்றர் ஒன்றிற்காக (0.37x9) எரிபொருள் 3.33 லீற்றர்கள் எரிகின்றது. அதன் பிரகாரம் ஒரு கிலோமீற்றருக்கு ஓடுவதற்கு பிரய்ம்மூவர் (கொள்கலன் எடுத்துச் செல்லும் பெட்டி) பயன்படுத்தினால் மேலதிகமாக எரிபொருள் எரிபொருள் சராசரி 03 லீற்றர்களாக இருப்பதன் காரணம் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் வாயு மற்றும் காபனிக் பொருட்கள் வழமையான அளவை விட மூன்று மடங்கு என அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் புகையிரத என்ஜின் மூலம் கன்டேனர் எடுத்துச் செல்வதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் சேதத்தினை மூன்று மடங்கினால் குறைப்பதற்கு இயலுமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் வருடாந்தம் 232,000 கன்டேனர்கள் விடுவிக்கப்படுவதுடன் இந்த கன்டேனர் ப்ரெய்ம் மூவர் (கொள்கலன் எடுத்துச் செல்லும் பெட்டி) மூலம் எடுத்துச் செல்லப்படுவதனால் எரியும் மேலதிக எரிபொருள் எண்ணிக்கை 696,000 லீற்றர் தொகை என மதிப்பீடு செய்ய முடியும்.

(ii) இலங்கையில் வாயு மாசடைதலில் 12.5 (2001 ஆண்டு) சதவீதம் வாகனங்களில் இருந்து வெளிப்படுத்தப்படும் புகையின் மூலம் ஏற்படுவதுடன் தற்காலத்தில் அது 40 சதவீதம் வரை நெருங்கியிருப்பதாக கணிப்பீடுகளின் மூலம் வெளியிடப்பட்டிருந்தது. புகையிரதத்தின் மூலம் கன்டேனர் போக்குவரத்து மேற்கொள்ளப்படும் போது வருடாந்தம் 696,000 எரிபொருள் லீற்றர்கள் எரியப்படும் வாயு மற்றும் காபனிக் பொருட்களின் மூலம் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் காபன்மொனொக்சைட்(CO), ஸல்பர் ஒக்ஸயிட் ($SO_2$) நயிட்ரஜன் ஒக்ஸயிட் ($NO_2$) தொங்கவிடப்பட்ட துணிக்கை பதார்த்தங்கள் (SPM) மற்றும் பார உலோகங்கள் மற்றும் ஈயம் (Heavy Metals, Pb) குறிப்பிட்ட அளவு கட்டுப்படுத்துவதற்கு இயலுமாக உள்ளது என அவதானிக்கப்பட்டது.

(iii) மேற்குறிப்பிட்ட பார உலோக வாசனையின் மூலம் ஏற்படக் கூடிய நோய்கள் ஆகிய தலைச் சுற்று, தலையிடி, சுவாச பாதிப்புக்கள், சளி படை மேற்படல், நியுமோனியா, நுரையீரல் வீக்கம் மற்றும் ஆஸ்துமா போன்ற நோய்களினால் சுகதேகியான பொதுமக்கள் வாழ்க்கைக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கக் கூடியதாக உள்ளதால் அது தொடர்பாக கவனம் செலுத்தியிருப்பதாக அவதானிக்கப்படவில்லை.

(ஆ) வருடாந்தம் இலங்கை துறைமுகத்தில் இருந்து 232,000 தொகை கன்டேனர்கள் வெளிப்படுவதுடன் குறைந்த அளவு அந்த கன்டேனர்கள் ஒருகொடவத்த கன்டேனர்கள் முடிவிடம் வரை 3.3 கிலோமீற்றர்கள் தூரம் புகையிரதத்தின் மூலம் எடுத்துச் செல்லக் கூடியதாக இருந்தது. ஒரு கன்டேனருக்கு ஒரு கிலோமீற்றருக்காக ரூபா 150 இற்கான கட்டணம் ஒன்றின் மூலம் புகையிரத்தில் எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் வருடாந்தம் ரூபா 114.84 மில்லியன் வருமானம் ஒன்றினை உழைக்கக் கூடியதாக இருந்தது. தற்போது இந்த போக்குவரத்து வழியினை கன்டேனர் போக்குவரத்திற்காக

பயன்படுத்தப்படாமையினால் இந்த மேலதிக வருமானம் உழைத்தல் தொடர்பாக திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 1867 முதல் 1934 வரையான காலப்பகுதியில் பண்டங்கள் போக்குவரத்து வருமானம் ஒட்டுமொத்த வருமானம் 57 சதவீதமாகக் காணப்பட்டது. தற்போது அது 9.3 சதவீதம் வரை குறைந்திருந்தது. அதன் படி போக்குவரத்து வருமானம் கீழிறங்கியதன் சதவீதம் 47.7 ஆகும்.

(ஈ) பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 11 பிராந்திய களஞ்சியங்களின் 2017 ஜனவரி மற்றும் திசெம்பர் மாதங்கள் தவிர ஏனைய மாதங்களில் எரிபொருள் தேவை 987,402,120 லீற்றர் தொகையாக இருந்தது. இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது 315,435,760 லீற்றர் எரிபொருள் புகையிரத்தின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த பிராந்திய களஞ்சியங்களுக்கு மேலும் 671,966,360 லீற்றர் எரிபொருள் புகையிரத்தின் மூலம் எடுத்துச் செல்வதற்கு முடியுமாக இருந்த போதிலும், அந்த எரிபொருள் அளவினை புகையிரத்தின் மூலம் எடுத்துச் செல்வதற்கு திணைக்கள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எடுத்துச் செல்லப்பட்ட அந்த எரிபொருள் இருப்பு டீசல் (BGT) எனப்படும் ரூபா 449.39 மில்லியன் வருமானம் ஒன்று அல்லது பெற்றோல் (BMT) எனப்படும் ரூபா 360.43 மில்லியன் வருமானம் ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு இயலுமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(உ) புகையிரத்தின் மூலம் சீமெந்து போக்குவரத்து செய்து உழைத்திருந்த வருமானம் 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது ரூபா 13.22 மில்லியனால் அதாவது சுமார் 60 சதவீதத்தினால் குறைந்திருந்தது. அந்த வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான தந்திரோபாயங்கள் திணைக்களத்தால் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 2.11 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2017 | மீண்டுவரும் | 18,487 | 12,889 | 5,598 | 30.28 |
| | மூலதன | 14,571 | 14,080 | 490 | 3.36 |
| | **மொத்தம்** | **33,058** | **26,969** | **6,088** | **18.41** |
| 2016 | மீண்டுவரும் | 21,337 | 15,694 | 5,644 | 26.45 |
| | மூலதன | 14,288 | 13,396 | 732 | 5.18 |
| | **மொத்தம்** | **35,676** | **29,090** | **6,376** | **17.87** |
| 2015 | மீண்டுவரும் | 43,886 | 30,436 | 13,450 | 30.64 |
| | மூலதன | 14,165 | 14,049 | 116 | 0.81 |
| | **மொத்தம்** | **58,051** | **44,485** | **13,566** | **23.36** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2013 | மீண்டுவரும் | 36,728 | 36,436 | 292 | 0.79 |
| | மூலதன | 16,964 | 16,943 | 21 | 0.12 |
| | **மொத்தம்** | **53,692** | **53,379** | **313** | **0.58** |
| 2017 | மீண்டுவரும் | 21,751 | 20,393 | 1,358 | 6.24 |
| | மூலதன | 10,791 | 10,586 | 205 | 1.09 |
| | **மொத்தம்** | **32,542** | **30,979** | **1,563** | **4.80** |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

10 செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 3,063.2 மில்லியனுக்கான தேறிய ஏற்பாடுகள் எதற்கும் பயன்படுத்தப்படாமல் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை ஏற்பாடுகள் மேற்கொண்டிருத்தல்**

48 செலவு விடயங்களில் சேமிப்பு ரூபா 829.53 மில்லியன் தொகையாக இருந்தது. அவை தேறிய ஏற்பாடுகளில் 05 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை காணப்பட்டது. 08 செலவு விடயங்களின் மீதான சேமிப்பு ரூபா 1,893.6 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அவை 51 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

### 2.12 மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்

திணைக்களத்தினால் 2017 ஆண்டிற்கான வருமானக் குறியீடு 01 இற்கான கூட்டுத்தொகை ரூபா 7,200 மில்லியன் இற்கான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 6,489.9 இற்கான வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீட்டு வருமானத்தில் 91 சதவீதமாக காணப்பட்டது. விவரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக சேகரிக்கப்பட்ட வருமானம் |
|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | மிகைத்தல்/ (பற்றாக்குறை) | |
| | ரூ.மில்லியன் | ரூ.மில்லியன் | ரூ.மில்லியன் | % |
| 20:01:01:00 | 7,200 | 6,489.9 | (710) | 90.13 |

**20:01:01:00 கொண்ட வருமானக் குறியீடு – புகையிரதத் திணைக்களம்**

கணக்காய்விற்க சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்கின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,525.27 மில்லியன் வருமானம் ஒன்று நிலுவையாக இருந்ததுடன், நிலுவையாக இருந்த காலவீச்சு 01 வருடம் முதல் 55 வருடங்கள் வரை ஆகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 1,387.29 தொகையாக காணப்பட்டதுடன் 2 அனுமதிப்பத்திரங்களில் வருமானத்தில் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையில் 31 சதவீதம் 05 வருடங்களை மிகைத்துள்ள கடன் மீதியாகும். 2018 ஜூன் 30 திகதி அளவில் இந்த நிலுவை வருமானங்களில் ரூபா 360.62 மில்லியன் தொகையினை தீர்த்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அனுமதிப்பத்திரம் 01 இல் வருமானத்தில் 20 வருடங்களை விட பழமையான ரூபா 0.77 மில்லியன் இற்கான நிலுவை மீதியை இது வரை தீர்த்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) புகையிரதத்தில் பண்டங்கள் கொண்டு செல்வது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டு இறுதி அளவில் 34 நிறுவனங்களில் இருந்து ரூபா 71.74 மில்லியன் தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் அவற்றில் 17 நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய ரூபா 20.3 மில்லியன் இற்கான நிலுவை மீதி 17 வருடங்களை விட பழமையான மீதிகளாகும். 2018 ஆகஸ்ட் 30 அளவில் இந்த நிலுவைத் தொகையில் ரூபா 33.55 மில்லியன் தொகை அறவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

(இ) சியெம்சிடி சீமெந்து (லங்கா) கம்பனிக்கு சுண்ணாம்புக் கற்கள் எடுத்துச் செல்லும் சேவை வழங்கல் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய 05 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 18.21 மில்லியன் இற்கான மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.13 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30601 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 830 | 820 | 400 | 453 | 1,500 | 1,320 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவை கடன் கடன் தொகையை அறவீடு செய்யாமை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 92,315,632 தொகையாகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவை கடன் மீதி 03 மாதங்கள் முதல் 15 வருடங்கள் வரை காலவீச்சு முதல் காணப்பட்ட போதிலும், அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யும் தொடர் நடவடிக்கை பலவீன நிலைமையில் காணப்பட்டது.

(ii) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 23 மில்லியன் தொகைக்கான ஆதனக் கடன் நிலுவை மீதியில் 39 ஆதனக் கடன்பெற்றோர்களிடம் ரூபா 10.5 மில்லியன் தொகை அறவிட முடியாமல் காணப்படுவதுடன் காணி உறுதிகளின் மூலப் பிரதி மற்றும் இரத்துச் செய்யமுடியாத அட்டோனித் தத்துவத்தை பயன்படுத்தி நிலுவைக் கடன் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 வருட ஆரம்பத்தில் உள்ளவாறு திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 949.82 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் திறைசேரியில் அச்சுப் பதிவுகளின் பிரகாரம் மீதி ரூபா 954 மில்லியன் தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களிடையே ரூபா 4.18 மில்லியன் இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வித்தியாசம் 2004 ஆண்டு முதல் காணப்படுவதுடன் அதனை தீர்ப்பதற்கு கணக்காய்வு திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2004 அக்தோபர் 11 திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரிவு 6.3 இன் பிரகாரம் தனிப்பட்ட கடன் மீதி வகைப்படுத்தலின் கூட்டுத்தொகை திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியுடன் இணக்கஞ் செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாமையினால் மேற்கூறிய இரண்டு மீதிகளிடையே ரூபா 21.74 மில்லியன் தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

**2.14 களஞ்சிய முற்பணக் கணக்கு**

---

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

---

திணைக்களத்தின் 30602 விடய இலக்கத்தின் கீழ் களஞ்சிய முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | | செலவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2,000 | 1,576 | 1,800 | 1,698 | 8,535 | 6,357 | 1,500 | - |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எல்லா ஆண்டிலும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் உள்ள அனைத்து பண்டங்களும் பௌதீக இருப்பு கணிப்பு ஒன்றின் பின்னர் கிரயத்திற்கு பெறுமதி கணிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டின் இருப்பு கணிப்பீடு செய்யாமல் இருப்புப் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள மீதியை அடிப்படையாகக் கொண்டு இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 5,312,065,598 தொகை என கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட இருப்பு தொகுதிகள் தொடர்பாக முன்னைய ஆண்டுகளில் மிகை பெறுமதி மதிப்பீடு செய்யப்படல் என காட்டப்பட்டிருந்த ரூபா 398.33 மில்லியன் இற்கான மீதி கணக்காய்வுத் திகதி வரை தீர்த்துக் கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், அதன் காரணமாக திறைசேரிக்கு செலுத்த வேண்டியிருந்த தொகை இந்த மிகை பெறுமதி மதிப்பீட்டின் காரணமாக குறைந்திருந்தது.

(இ) பல வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்படும் களஞ்சிய முற்பணக் கணக்கின் மீதி மற்றும் திறைசேரியின் கணினி அச்சு பதிவுடன் இணக்கஞ் செய்த போது ஆரம்ப மீதியில் மற்றும் இறுதி மீதியில் ரூபா 25,025,164 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு களஞ்சிய பேரேட்டின் பிரகாரம் 17 உப திணைக்களங்களின் கீழ் வழங்கிய இருப்புக்களுக்காக பெறவேண்டிய களஞ்சிய சிட்டைகளின் பெறுமதி ரூபா 805,263,496 தொகை என கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த மீதி உப திணைக்களங்களில் புத்தகத்துடன் இணக்கஞ் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(உ) 1993 ஆண்டு முதல் இது வரை பண்ட இறக்குமதியின் போது சுங்கத்தீர்வை என மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 108,468,192 இற்கான செலவு 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்புகளுடன் சீராக்கல் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த பணத்தில் 2018 ஜூன் 30 திகதி வரை ரூபா 34,541,470 தொகை தீர்க்கப்பட்டிருந்த தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக 1980 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை 37 வருட காலப் பகுதியில் வழங்குனர்களுக்கு செலுத்தியிருந்த முற்பணங்களில் இருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் அறவிடப்பட வேண்டிய முற்பண மீதி ரூபா 18.37 மில்லியன் தொகையாக இருந்தது, 2018 ஆண்டின் போது ரூபா 7.82 மில்லியன் தொகை தீர்க்கப்பட்டிருந்தது.

(எ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்குனர்களுக்காக நாணயப் பத்திரத்துக்காக ரூபா 76,540,868 தொகை செலுத்தியிருந்த போதிலும் பண்டங்கள் வழங்கியிருக்காமையால் வழங்குனர்களுக்கு அறிவித்து பண்டங்களை பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு

செயற்பட்டிருக்கவில்லை. மேலும் 1980-2009 வரையான காலம் தொடர்பாக வழங்குனர்களுக்கு நாணயப்பத்திரங்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 33,681,582 தொகைக்கான பணம் திருப்பி அறவிடப்படல் அல்லது பண்டங்கள் கிடைக்கப்பெறல் நடைபெற்றிருக்கவில்லை.

(ஏ) 1998 முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை தீர்க்கப்படாதிருந்த நாணயப் பத்திரங்களின் பெறுமதி ரூபா 533 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் 2018 ஜூன் 30 திகதி அளவில் ரூபா 165 மில்லியன் இற்கான நாணயப் பத்திரங்களை தீர்ப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஐ) களஞ்சிய முற்பணக் கணக்கில் பலவின கடன்கொடுத்தோர் என காட்டப்பட்டிருந்த ரூபா 123 மில்லியன் இற்கான மீதியில் இனங்காண முடியாத 07 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையான வீச்சில் பழைய ரூபா 77 மில்லியனுக்கான மீதியொன்று காணப்பட்டது.

**2.15 கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடிவிடும் அலுவல்களை மேற்கொள்வதற்கான முற்பணக் கணக்கு**

அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் பிரகாரம் 05 முற்பணக் கணக்கு விடயங்களின் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடிவிடும் அலுவல்களை மேற்கொள்வதற்காக திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்ததுடன், அந்த கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடும் அலுவல்கள் 1987 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 30 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த ஒழித்தல் அலுவல்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை. மேலும் அந்த கணக்குகளில் அங்கீகரிக்கப்படாத திரண்ட தொழிற்படு நட்டம் மொத்தம் ரூபா 3.4 மில்லியனாகும்.

**2.16 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | உப திணைக்களங்களை ஒன்றிணைத்து பொது நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) இன் பிரகாரம் மீதான 11 ஆம் பிண்ணிணைப்பு |
| (ஆ) | கணினிகள், துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 இலக்க கொண்ட திறைசேரி சுற்றறிக்கை |
| (இ) | பொறுப்புக்கள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |

## 2.17 இணக்கமின்மை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை** | | |
| (i) | நிதிப் பிரமாணங்கள் 103, 104, 105 மற்றும் 109 | 298,976,755 | நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனின் திணைக்களத்தின் நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 128(1) | 3,568,752 | அரசாங்க விடயங்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்த்த சிக்கனம் வினைத்திறனுடன் செயற்படாமை யினால் மீளாய்வாண்டின் போது களஞ்சிய விடயங்கள் துறைமுகத்தில் இருந்து விடுவித்தல் தாமதமாகிய காரணத்தினால் தாமதக் கட்டணம் (Demmarages) செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 565(5) | 526,270,263 | மாதாந்த வைப்புக்கள் பொழிப்புத் திரட்டு தொடர்ந்துவரும் மாத இறுதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2010 பெப்ரவரி 03 திகதி SP/RD/2/10 இலக்கங் கொண்ட சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பந்தி 6 | - | புகையிரத ஒதுக்கல் பிரதேசத்தில் வசிக்கின்ற அங்கீகாரமற்றவர்களை அகற்றுவதற்காக 1979 இன் 07 ஆம் இலக்க அரச காணிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2013 ஜனவரி 24 திகதிய - SA/AS/AA/Circular கொண்ட அரச சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருமானம் கணக்கு அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.18 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

திணைக்களத்தின் செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட, மிகைப் பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 9,096 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 568,360 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 212 | 117 | 95 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 451 | 123 | 328 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 10,958 | 6,667 | 4,291 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 8,601 | 7,900 | 701 | - |
| (v) | அமைய/ஒப்பந்த | - | 1,204 | - | 1,204 |
| | மொத்தம் | 20,222 | 16,011 | 5,415 | 1,204 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பதவியணி குறைபாடுகள்**

(i) புகையிரதத் திணைக்களத்தினால் கணக்காய்விற்காக சமர்ப்பித்திருந்த பதவியணி தரவுகளின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான சிரேஷ்ட நிலைய பதவிகளில் வெற்றிடங்களின் எண்ணிக்கை அதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் 45 சதவீதம் ஆகும். நிறுவனத்தின் தூர நோக்கு மற்றும் பணிகளை நெருங்குவதற்காக உதவக் கூடிய பிரதான முன்னோடி பதவிகளில் பற்றாக்குறை முன்னைய ஆண்டுகளை விட மீளாய்வாண்டின் போது அதிகரித்தல் திணைக்களத்தின் செயலாற்றல் குறைவதற்கு நேரடியாக பாதிக்கக் கூடியதாக உள்ளது என சந்தேகத்தை கணக்காய்வின் போது அகற்ற முடியாது.

(ii) திணைக்களத்தினால் ஒட்டுமொத்த பதவியணிக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று காணப்படவில்லை.

(iii) மேலதிக பொது முகாமையாளர் (செயற்படு) போக்குவரத்து அத்தியட்சகர் மற்றும் உதவி களஞ்சிய அத்தியட்சகர்கள் ஆகிய 09 பதவிகளின்

வேலைகளை மேவகை செய்வதற்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(iv) திணைக்களத்தினால் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்காமல் 1,204 ஊழியர்கள் அமைய பதவியணி என முறையான அங்கீகாரம் இன்றி சேர்க்கப்பட்டிருந்தனர்.

(v) ரத்மலான உப திணைக்களத்தின் பாதுகாப்பு அலுவல்களுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 75 தொகை ஆகக் காணப்பட்டதுடன் சேவையில் ஈடுபடுத்தியிருந்த எண்ணிக்கை 41 தொகையாகும். பாரிய வெற்றிட எண்ணிக்கை காணப்படல் பாதுகாப்பு தொடர்பாக பாரிய அச்சுருத்தல் ஒன்று ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

(vi) திணைக்களத்தின் காணப்படும் சன்டின் சாரதிகள், என்ஜின் சாரதிகள், சாரதி உதவியாளர்கள், புகையிரத வழிகாட்டி, புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவம் ஆகிய ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்காமல் திணைக்கள சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ள 144 உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

**(ஆ) முறைசாரா விதமாக வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு 32 உத்தியோகத்தர்கள் முறைசாரா விதமாக விடுவிக்கப்பட்டிருந்தனர்.